AstroVed

# சத்வித்யா

மாலை: 1 மலர்: 3

எஸ்பி -75, சிட்கோ தொழில்துறை எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600058.

ஆன்மீக விஞ்ஞான இதழ்

இணையதளம் வாயிலாக மாதம் ஒரு முறை வெளிவரும்



# புரட்டாசிமாத மகிமை

- செப்டம்பர் மாத ராசிபலன்கள்
- பெயர் எண்களின் சிறப்பு
- ஆவணி மாதத் தகவல்கள்
- மந்திரங்களின் மகிமை

அனைத்து இதழ்களையும் AstroVed.com இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்து பயன் பெறலாம்

மேலும் விபரங்களுக்கு போன்: 95004 95008, www.astroved.com

AstroVed

# சத்வித்யா



கருப்பசாமி வழிபாடு நாடெங்கும் நடைபெற்று வருகிறது. இருந்தாலும் கருப்பசாமி மட்டுமே ஏழைகளின் தெய்வமாகப் போற்றப்படுகிறார் அவர் ஏழைகளுக்கு மட்டுமே இறங்கக் கூடியவர். கருப்பசாமி குறி சொல்லும்போது ஊர் பெயர் சொல்ல அழைத்து நல்லகுறி சொல்வது என்னமோ ஏழைகளுக்காகத்தான் இருக்கும். எந்த ஒரு செல்வந்தரையும் அழைத்து கருப்பசாமி சொல்வதில்லை. கருப்பசாமியால் செல்வந்தரான ஏழைகள் ஏராளம்.

~ Dr. Baskaran Pillai



இணையதள வாசகர்கள் அனைவருக்கும் எங்கள் சத்வித்யா இதழின் அன்பான வணக்கம்!

நமது தேசம் ஆன்மிகதேசம் என்பதனை ஒவ்வொரு மாதத்திலும் வருகின்ற நமது பாரம்பரிய விழாக்கள் உறுதிபடுத்துகின்றன. கடந்த இதழில் கோகுலாஷ்டமி என்னும் கிருஷ்ண ஜெயந்தி பற்றிய குறிப்புகள் நம் இதழில் இடம் பெற்றன. இந்த இதழில் ஆவணி மாதத்தின் பிற்பாதியும் புரட்டாசி மாதத்தின் முற்பாதியும் இணைகிறது. இந்துக்களின் பண்டிகைகள் தொடங்கும் விதமாக முதற்கடவுள் விநாயகரின் சதுர்த்தி, நமது பாரம்பரிய ஆன்மிக கொண்டாட்டங்களுக்கு ஆரம்பமாய் அமைந்தது, ஆவணி புரட்டாசியில் அணிவகுத்து வருகின்ற பண்டிகைகளை கொண்டாடும் வகையில் கொடியதோர் வைரஸான கொரோனா ஒழிய இறையருளை வேண்டுவோம். எல்லாம் வல்ல இறைவன் இந்த கொடிய நோயிலிருந்து உலகைக்காக்க அருள்புரிய மனமார வேண்டுவோம்.

அன்புடன்

அச்சிட்டு வெளியிடுவோர் ஆஸ்ட்ரோவேட்.காம்

# ஆவணி மாதத் தகவல்கள்

ஆடல் வல்லானும் ஆவணி மூலமும் தெய்வம் மனிதனுக்குச் சொன்னது - பகவத்கீதை; மனிதன் மனிதனுக்குச் சொன்னது - திருக்குறள்; மனிதன் தெய்வத்திற்குச் சொன்னது - திருவாசகம். ஆம்! ஆடல்வல்லானான சிவபெருமானே தம் திருக்கரம்கொண்டு முழுவதுமாக எழுதிய பெருமை பெற்றது "திருவாசகம்" மட்டுமே. அத்திருவாசகத்தின் ஆசிரியர் மாணிக்கவாசகர்.

மதுரைக்கு அருகே உள்ள திருவாதவூரில் அமாத்தியர் குலத்தில் சம்பு பாதாசிரியர்-சிவஞானவதி தம்பதிக்குக் குமாரராகத் திருஅவதாரம் செய்த மாணிக்கவாசகரின் பிள்ளைத்திருநாமம் "திருவாதவூரர்". இவர் பாண்டிய மன்னரிடம் மந்திரியாக இருந்தபோது, மன்னர் இவரிடம் ஏராளமான பொன்னைக்கொடுத்துக் குதிரைகளை வாங்க அனுப்பினார். குதிரை வாங்கப்போன மாணிக்கவாசகர், திருப்பெருந்துறையில் குருவடிவாகி இருந்த சிவபெருமானைத் தரிசித்து அவ ருக்கு அடிமையானார். மன்னர் கொடுத்தனுப்பிய தங்கம் எல்லாம் சிவபெருமானின் திருப்பணிக்குச் செலவாயிற்று.

தகவலறிந்த மன்னர் தம் ஆட்கள் மூலம், மாணிக்க வாசகரை அழைத்துவரச் சொன்னார். மாணிக்கவாசகர் இறைவனிடம் முறையிட, "ஆவணி மூல நாளில் குதிரை வரும்" என இறைவன் வாக்கு தந்தார். அதன்படியே ஆவணி மூலத்தன்று, நரிகளைப் பரி(குதிரை)களாக ஆக்கி, மதுரை வீதிகளில் உலாவரச் செய்தார் சிவபெருமான். அந்தத் திருநாள் இன்றும் "ஆவணிமூலப் பெருவிழா" என்று மதுரையில் சிறப்பாகக் கொண்டாடப் படுகிறது. ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் ஜோதியான சிவபெருமான் தம் வடிவோடுலாவித் திருவிளையாடல் நடத்திய திருநாள் இது.

மாணிக்க வாசகர் - 2

## தங்கம் கோவிலான வரலாறு

குதிரை வாங்குவதற்காக மன்னர் கொடுத்த தங்கத்தை, மாணிக்கவாசகர் ஏன் கோவில் கட்டப் பயன் படுத்தினார்? இதற்கான அடிப்படை உண்மையைச்சொல்லும் "தலபுராணத்தகவல்". பிரம்மாதி தேவர்கள் முதலான அனைவரும் அவ்வப்போது கைலாயம்வந்து கைலாயநாதரையும் அம்பாளையும் தரிசித்துத் திரும்புவார்கள். அவர்கள் விழுந்து வணங்கி, எழுந்து கைகளைத் தலைக்குமேல் கூப்பி வணங்கும்போது, அவர்கள் உடம்புகளில் உள்ள தங்க ஆபரணங்கள் ஒன்றோடொன்று உரசி, ஏராளமான தங்கத் துகள்கள் கீழே சிந்தும். அந்தத்தங்கத் துகள்களையெல்லாம் பூத கணங்கள் அள்ளிக்

கொண்டுபோய் வெளியில் கொட்டும்; இதனால் கைலை வாசலில் தங்கத்துகள் குன்றுபோலக் குவிந்திருந்தது.

கைலைநாதனின் தரிசனத்திற்காகக் கைலை வந்த துர்வாசர், தன் கையிலிருந்த தண்டத்தை அங்கிருந்த தங்கத்துகள் குன்றின் மேல் நட்டு வைத்து விட்டு, பரமனையும் அம்பாளையும் தரிசித்து வெளியே வந்தார். வந்தவர் தண்டத்தை எடுத்தார்; அதன் அடியில் பூண்போலப் போடப்பட்டிருந்த வளையத்தில் ஏராளமான தங்கத் துகள்கள் அழுத்தமாக ஒட்டிப்பதிந்திருந்தன.

அதைக் கவனிக்காத துர்வாசர் ஆகாயவீதி வழியே, அங்கயற்கண்ணாளையும் ஆலவாய் அண்ணலையும் தரிசிக்க மதுரைவந்தார். அங்கு வந்ததும்தான் கையிலிருந்த தண்டத்தில் தங்கத்துகள்கள் ஏராளமாக ஒட்டிப் பதிந்திருப்பதைக்கண்டார். வெறுக்கை(செல்வம்)மீது வெறுக்கை (வெறுப்பு) கொண்ட துர்வாசர் அத்தங்க்தை அங்கேயே ஆலயவாசலில் கொட்டிவிட்டுத் தரிசனத்தை முடித்து விட்டுப் போய் விட் டார். சற்று ரேத்தில் அங்கே தரிசனத்திற்காக வந்த பாண்டிய மன்னர், ஆலய வாசலில் கிடந்த தங்கத்தை அப்படியே அரண்மனை கஜானாவில் சேர்த்துவிட்டார்.அந்தத்தங்கம் தான் அரசாங்க வைப்புநிதியில் சில ஆண்டுகள் கழித்து இரண்டு மடங்காக/மூன்று மடங்காகப் பெருகுவதைப்போல, பன் மடங்காகப் பெருகியது. அத்தங்கம்தான் மன்னரால் மாணிக்கவாசகரிடம் கொடுக்கப்பட்டது. அத்தங்கத்தைத்தான் மாணிக்கவாசகர் அரனுக்கு ஆலயம் கட்டப் பயன் படுத்தினார். ஆகவே அரசாங்க சொத்தை எடுத்து ஆலயம் கட்டப்பயன் படுத்த வில்லை மாணிக்கவாசகர்.
(குறிப்பு : இத்தகவலைத் திருவாதவூர்த் தல புராணம் விரிவாகக் கூறுகிறது)




~ பன்னீர்செல்வம்

# எண் கணிதத்தில் பெயர் எண்களின் சிறப்பு

கடந்த சத்வித்யா இதழில் சிறப்பு பெயர் எண்களில் 5 வரை பார்த்தோம் 5 வரிசையில் 59 என்ற எண்ணில் பெயர் வைத்தால், எழுத்தால் ஐஸ்வர்யம் உண்டாகும் என்ற தகவலைப் பார்த்தோம். அதோடு பிறவி எண், விதி எண் இரண்டுமே 5 எண்ணாக வந்தால் அந்த நபருக்கு 5 என்று வரும்படி பெயர் வைக்கக்கூடாது ஏனென்றால், 5 என்ற எண் மாற்றத்திற்கு உரியது! அதனால் தான் கீழ்நிலையில் உள்ள சிலர் 5 என்று வருமாறு பெயர் வைத்துக்கொண்டால் உன்னத நிலையை அடைகின்றனர் ஆனால், பிறவி எண்ணும் விதி எண்ணும் ஐந்தாக இருந்து பெயர் எண்ணும் ஐந்தாக அமைந்தால் அவர்களுக்கு நிலையற்ற வாழ்க்கையே அமையும். நித்தம் நித்தம் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கும். எனவே அப்படிப்பட்டவர்கள் கவனமுடன் பெயர்வைக்க வேண்டும்.

இதனையடுத்து 5 என்ற வரும்படி, 68, 86 போன்ற எண்கள் வியாபாரம் செய்வதற்கு உகந்தவை. தோல்வியற்ற வியாபார வளர்ச்சி அமையும். இதில் 77 என்ற எண் மிகவும் சிறப்பானது. வெளிநாடு தொடர்பான ஏற்றுமதி, இறக்குமதி போன்ற வியாபாரங்களுக்கு 77 என்று வரும்படி பெயறிட்டால், வளம் கொழிக்கும், வருமானம் பலமடங்கு பெருகும் வெற்றிகள் குவியும், 95 என்று வரும்படி பெயர் வைப்பதும் வியாபார அபிவிருத்தியைக் கொடுக்கும்.



அடுத்து, சுக்கிரனின் ஆதிக்கத்தில் வரும் 6ம் எண் ஆறு என்றும் எண் சுக்கிர ஆதிக்கம் கொண்டது. எனவே, சுகமான வாழ்க்கைக்கு அடித்தளமிடும் அதிர்ஷ்டம் கொண்டது இந்த ஆறாம் எண். 15 என்று வரும்படி பெயர் வைத்தால் நல்ல நிலை கிடைத்தாலும் மனம் மட்டும் கீழான எண்ணங்களை ஆசை போட்டபடி இருக்கும்."24" என்று பெயர் அமைந்தால் ராணுவம், காவல்துறை போன்றவற்றில் அதாவது, சீருடைப் பணிகளில் சாதாரண ஊழியராய் சேருபவர் கூட அந்தத் துறையின் உச்சத்தை எட்டுவர். 33 என்று வருமாறு பெயர் வைத்தால், சாமியே கும்பிடாதவர்களாக இருந்தால் கூட அம்மனின் அருள் தொடர்ந்து கொண்டே இருக்கும். செலவு குறைவாகவும் வருமானம் அதிகமாகவும் இருக்கும். மாபெரும்

செல்வந்தராக விளங்குபவர். அருளும் பொருளும் ஒருங்கே அமையப் பெற்றதே இந்த 33, 42ம் நிதானமான வளர்ச்சியைக் கொண்டது 51 என்று வரும்படி பெயர் அமைந்தால் மிகவும் துரிதமான முன்னேற்றம், செல்வம் சேரும். இறுதிக் காலத்தில் உயிர் பயத்தை உண்டாக்கும் எதிரிகள் தோன்ற வாய்ப்பு உண்டு எனவே, நேர்மையாக வாழ்வது நல்லது, 78, 87 போன்ற எண்கள் வியாபாரத்திற்கு

உகந்தது. இதில் 69என்பது மிகமிக சிறப்பான எண், தனி நபரோ, தொழில் நிறுவனமோ 69என்ற பெயரில் அமைந்தால் புகழும் செல்வமும் உச்சநிலையை அடையும்.



பொதுவாகவே, 6 என்னும் எண், ஆறு போல பெருகி வந்து இன்பங்களை கொடுக்கக்கூடியது. அடுத்து 7 கேதுவான் ஆதிக்கத்தில் வருகின்ற 7 என்ற எண் ஞானத்தை அளிக்கக் கூடியது. பெரும்பாலும் இந்த 7 எண்ணில் பிறந்தவர்கள் தான் விவாகரத்து என்ற நிலைக்கு தள்ளப்படுவார்கள். தெளிந்த அறிவை மெல்ல மெல்ல கொடுக்கக்கூடிய 7 எண்ணில் பெயர் அமைந்து, ஒருவர் வெற்றியாளராக வாழ்கிறார் என்றால் அவருக்கு இறையருள் நிறைய உண்டு என்பதை உண்மை. பல தோல்விகள், தொடர் துன்பங்கள் என எத்தனை இடர் வந்தாலும் அனைத்தையும் தாண்டி, இறுதியில் வெற்றி கிடைக்கும். தொடர்ந்து போராட விரும்பாதவர்கள் 7 என்று வரும்படி பெயர் வைத்துக் கொள்ள விரும்புவார்களா? மொத்தத்தில் தெளிந்த அறிவே 7 என்ற எண்ணாக வரும். அடுத்த 8 என்னைப் பார்போம் 8 என்ற என்னைக் கண்டாலே எட்டி நிற்போர் உண்டு. இது பெரும்பாலும் யாராலும் விரும்பப்படாத வெறுத்து ஒதுக்கத்தக்க எண் ஆயினும் இந்த 8 எண்ணிலும் நிறைய சிறப்புகள் உண்டு அடுத்த இதழில் பார்ப்போம்

~ பன்னீர்செல்வம்



# சோமவார விரதம்

சோமன் என்ற சொல்லுக்கு, அம்பிகையுடன் கூடிய சிவபெருமான் என்றும்; சந்திரன் என்றும் பொருள் உண்டு. சந்திரன் சிவபெருமானை நோக்கி விரதமிருந்து, "சோமன்" எனும் பெயரும் சிவபெருமானின் திருமுடியில் நீங்காமல் நிலைபெற்று இருக்கும்படியான வாழ்வும் அடைந்த திருநாள் இது; அதன் காரணமாக இந்நாள்(திங்கள்) சோமவாரம் எனவும், இந்நாளில் கடைபிடிக்கப்படும் விரதம் சோமவார விரதம் எனவும் அழைக்கப்படுகிறது.



வாராவாரம் வரும் திங்கள் கிழமையன்று இவ்விரதத்தைக் கடைபிடிப்பவர்களும் உண்டு. கார்த்திகை மாத முதல் திங்கள் கிழமையன்று இவ்விரதத்தைத் தொடங்கி, கடைபிடிப்பவர்களும் உண்டு. "பன்னிரண்டு வருடகாலங்கள் சோமவார விரதம் இருக்கிறேன" என்று சங்கல்பம் செய்து, அதன்படியே பன்னிரண்டு வருட காலங்கள் சோமவார விரதம் இருந்தவர்களும் உண்டு. இத்தகவல்களையெல்லாம் "பிரமோத்திர காண்டம" எனும் நூல் விரிவாகவே கூறுகிறது.

திங்கள் கிழமை அதிகாலையில் எழுந்து நீராடி, விபூதி முதலான சிவ சின்னங்களை அணிந்து சிவபூஜையைச் செய்து முடிக்க வேண்டும். அதன் பின் அவரவர் சக்திக்கு இயன்றவாறு, வேத வல்லுனர்களை அவரவர் மனைவியருடன் அழைத்துவந்து, நல்ல ஆசனமிட்டு அத்தம்பதியரைப் பார்வதி-பரமேஸ்வரராகவே பாவித்துப் பூஜைசெய்ய வேண்டும். பூஜை முடிந்தபிறகு அத்தம்பதியர்க்கு அன்னம் முதலானவைகளை இட்டு உபசரித்து, அவர்களைத் திருப்தியடையச்செய்ய வேண்டும்.

அதன்பின் சிவபெருமானுக்குப் பஞ்சாமிர்தத்தால் அபிஷேகம் முதலானவைகளைச் செய்து வழிபட வேண்டும். சோமவார விரதம் எனும் இவ்விரதத்தைக் கடைபிடித்து, நல்வாழ்வு பெற்றவர் பலர். அவர்களில் முக்கியமானவர்- தலைமையானவர் "சீமந்தனி". அழுத்தமான சோமவாரவிரத பூஜையால் சீமந்தனி செய்த செயல்கள் பற்பல.

பிள்ளைப்பேறு,செல்வம்,அமைதியான வாழ்வு, அனைத்திற்கும் மேலாக மனநிம்மதி ஆகியவற்றை அருளக்கூடிய விரதம் "சோமவார விரதம்".

காலை வணக்கங்கள்! சோமவார விரதத்தில் சொல்லப்பட்ட சீமந்தனியின் அனுபவம் பின்னாலே உடனே வரும். தயவு செய்து எங்கள் பகுதியான ராயபுரம் - தண்டையார்பேட்டை பகுதிகளுக்குத் தாங்களோ தங்களைச் சார்ந்தவர்களோ வரவேண்டாம். பாதிப்பு அதிகமாக உள்ள பகுதிகள் இவை. மன்னிக்கவும் நன்றி.

~ சொல்லில் செல்வன் PN பரசுராமன்

# மூலிகை ரகசியம்



## சிறுகுறிஞ்சான் (Gymnema Sylvestre)

வளரியல்பு: கோடி

மாற்றுப்பெயர்: குறிஞ்சான், சர்க்கரைக்கொல்லளி, குரிந்தை.

மருத்துவத்திற்கு பயன்படும் பாகங்கள்: இலை, வேர்.

மருத்துவப்பயன்கள்: வேர், இலைகள், மதுமேகம் எனப்படும் (சர்க்கரை நோய்யைக் குணமாக்கும்) உடலில் ஏற்படும் நஞ்சு முறிக்கும். காய்ச்சல் நோய் போக்கும், நரம்புகளைப் பலப்படுத்தும், பசியைத்தூண்டும், இருமல் நோய் குறையும், மாதவிலக்கு சரியாகும்.

### நீரிழிவுநோய் கட்டுப்பட

இலைகள், அத்துடன் சம எடை அளவு நாவற்கொட்டை, இரண்டையும் தனித்தனியாக நிழலில் உலர்த்தி இடித்து தூளாக்கி சலித்து வைத்துக்கொண்டு, 1 தேக்கரண்டி அளவு வெந்நீரில் காலை, இரவு இரண்டுவேளை வெந்நீரில் குடித்துவர மதுமேக நோய்க்குணமாகும்

### மாதவிலக்கு சரியாக

ஒரு கைப்பிடி இலைகளுடன் 2 கைப்பிடி களா இலை சேர்த்து மைய அரைத்து, பசையாக்கி, காலையில் உட் கொள்ள வேண்டும்.



### சுவாசகாசம் தீர

வேர்த்தூள் ஒரு சிட்டிகை சுக்கு, மிளகு, திப்பிலி, கலந்து தயாரித்த தூள் (திரிகடுகு சூரணம்) ஒரு சிட்டிகை கலந்து வெந்நீரில் குடித்து வர வேண்டும். காலை, இரவு இரண்டு வேளைகளில் 7 நாட்கள் வரை.

### ஒவ்வாமை நஞ்சு நீங்க

வேரைக் காயவைத்து பொடி செய்து, ஒரு தேக்கரண்டி அளவு சாப்பிட வாந்தி ஏற்படும், நஞ்சு குறையும்.

### இருமல் குணமாக

வேறை 20 கிராம் எடுத்து நன்கு நசுக்கி, ஒரு லிட்டர் நீரில் போட்டு 100 மி.லியாகக் சுண்டக் காய்ச்சி, வடிகட்டி வைத்துக்கொண்டு, காலை, மதியம், இரவு மூன்று வேளை 30 மி, லி அளவு ஒரு நாள் கொடுக்கவும்

~ டாக்டர் தங்கமணி

# சித்தர் பூமி



## கோரக்க மகாசித்தர்

நமது சத்வித்யா இதழில் இந்த மாதம் நாம் 'சித்தர் பூமி'யில் தரிசனம் செய்யவிருப்பது கோரக்க சித்தரின் ஜீவசமாதி! வேளாங்கண்ணி, நாகூர் என பல மத புனித்த தலங்களை உள்ளடக்கிய நாகப்பட்டிணம் மாவட்டத்தில் நாகப்பட்டிணத்திற்கு மிக அருகில் அமைந்துள்ள வடக்குப் பொய்கை நல்லூர் என்னும் சிற்றூரில் தான் 18 சித்தர்களின் ஒருவரான கோரக்க சித்தரின் ஜீவசமாதி அமைத்துள்ளது. யார் இந்த கோரக்கர்? அவர் இந்த ஊரில் பிறந்தவரா? இந்த இடத்தில அவரது ஜீவசமாதி அமைந்தது எவ்வாறு? கோரக்க சித்தர் நிகழ்த்திய அற்புதங்கள் என்ன? என்பதையெல்லாம் இப்போது பார்க்கலாம்.

## மச்சேந்திரன் வருகை

ஞானத்திலும் மருத்துவத்திலும் கைதேர்ந்து விளங்கிய சிவஞான போதகராகிய மச்சேந்திர சித்தர் கொல்லிமலையிலிருந்து பொதிகைமலை நோக்கி புறப்பட்டார். வழியில் ஒரு சிற்றூரை நெருங்குகையில் மச்சேந்திரருக்கு தாகம் உண்டானது. தாகத்தைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டு ஒரு குடிலின் வாசலில் போய் நின்று தன்னுடைய தாகம் தீர்க்குமாறு கேட்டுக்கொண்டார். அந்த இல்லத்தின் தலைவரான பிராமணர் வெளியே சென்றிருக்க, இல்லத்தரசியான பிராமணப் பெண்மணி மச்சேந்திரரைப் பார்த்து. இவர் ஓர் சிவயோகி என்பதை உணர்ந்து, அவருடைய தாகம் தனித்தோடு உணவும் அளித்து பசியையும் போக்கினாள். அந்த பிராமணப் பெண்ணின் சிவத்தொண்டில் ஆக மகிழ்ந்தார் மச்சேந்திரர். அவளுடைய முகத்தில் சொல்ல வொண்ணாத சோகம் இழையோடுவதை அறிந்த மச்சேந்திரர், அப்பெண்ணிடம் சோகத்திற்கான காரணத்தைக் கேட்க, மணமாகி பல ஆண்டுகள் ஆகியும் தனக்கு மகப்பேறு வாய்க்காத குறையினைக்கூறி கண்ணீர் உகுந்தாள் அந்த பிராமணப் பெண். அவளுடைய குறையினை தீர்க்க எண்ணிய மச்சேந்திரர்தன்னிடம் இருந்த திருநீற்றினை ஓர் இலையில் வைத்து அவளிடம் கொடுத்து, கணவன், மனைவி இருவரும் நெற்றியில் இட்டுக் கொண்டு, மீதமுள்ள திருநீறை நீரிலிட்டு அருந்தி சிவப்பரம் பொருளை வேண்டினால் உறுதியாக மகப்பேறு வாய்க்கும் என்று கூறிச்செல்கிறார்.

அனால், அப்பெண்மணியோ, ஒரு சாதாரண சிவனடியாரின் திருநீறுக்கு இத்தனை மகிமை இருக்குமா? எல்லாம் கபடம் என மற்ற பெண்மணிகள் சொன்ன சொல்லை ஏற்று அந்த திருநீற்றினை எரிகின்ற அடுப்பில் கொட்டி வருகிறார் இதைத்தான் விதி வலியது என்பார்களோ?

பொதிகை மலைக்கு சென்று தவமியற்றிய மச்சேந்திரர் சுமார் பத்தாண்டுகள் கழித்து, மீண்டும் கொல்லிமலைக்குத் திரும்புகிறார், வழியில் அந்த கிராமத்து வீட்டின் முன் நின்று அந்தப் பெண்மணியை அழைத்து, உன் மகனுக்கு இப்பொது ஒன்பது வயது இருக்குமே! அவனை கூப்பிடு ஆசிர்வதிக்கிறேன் என்கிறார்.

அப்பெண்மணி, மனம் கலங்கி, திருநீற்றினை தான் அடுப்பில் கொட்டியதைக்கூற, அடுப்பின் சாம்பலை எங்கே கொட்டினாய்? என்று கேட்கிறார். குப்பையில் கொட்டினேன் என்று பெண்மணி சொல்ல, குப்பையின் அருகில் சென்ற மச்சேந்திரர் "கோரக்கா வா" என்று குரல்கொடுக்க, குப்பையிலிருந்து ஒன்பது வயது பிராமண சிறுவனாக வந்தவர் தான் கோரக்கர்! கோரக்கர் என்றால் குப்பையில் தோன்றியவர் என்று பொருள்!
"உன் மகனுடன் வாழ்க்கையை நடத்து" என அந்தப் பெண்ணிடம் மச்சேந்திரர் சொல்ல, அவள் மகிழ்ச்சி அடைவது. அனால், கோரக்கனோ.. எனக்கு நாட்டம் இல்லை. நான் எனது குருவான தங்களுடனே வருகிறேன் என்று மச்சேந்திரர்பின் பின் தொடர்ந்தார்.

யோகம், ஞானம் மருத்துவம் என சகலகலைகளிலும் தேர்ச்சி பெற்ற கோரக்கரை கைலாயம், சீனா போன்ற இடம்களுக்கு அழைத்துச் சென்றார் மச்சேந்திரர், அந்த சமயத்தில் போகரின் அறிமுகமும் நட்பும் கிடைத்தது கோரக்கருக்கு

இருவரும் தங்கள் குருமார்களின் ஆசியோடு தென்திசைக்கு வந்தனர். வான்வழியில் வரும்போது போகருடைய குளிகை கீழே விழுந்துவிட்டது. அதை எடுப்பதற்காக இருவரும் கீழே இறங்கினார்கள். குளிகையை எடுத்துக்கொண்டு போகர் பொதிகையை அடைய, கோரக்கர் வேள்வி ஒன்றை நடத்தி, வாலைக்குமரியின் வளமார் அருளாலும் இறைவனின் ஆசியாலும் இந்த தலத்திலேயே ஜீவசமாதி அடைந்தார், என்பது இந்தத் தலத்து வரலாறு!

இன்றுவரை இந்த தலத்தில் இரவு சூழும் மாலை நேரத்தில் அன்னக்காவடி சுமந்து, அன்னத்தை தானமாகப் பெற்று வந்து ஜீவசமாதியில் படைத்து, பலருக்கும் பிரசாதமாக வழங்குகின்றனர். இந்த வழக்கம் எதனால் ஏற்பட்டது? சந்திரரேகை என்பது என்ன? கோரக்கர் நிகழ்த்திய சித்து வேலைகள் என்னென்ன? இன்றளவும் இந்த வடக்குப் பொய்கை நல்லூர் கோரக்க மகாசித்தர் ஜீவசமாதியில் நடைபெறும் அதிசய நிகழ்வுகள் என்ன? என்பதையெல்லாம் அடுத்த இதழில் பார்ப்போம்.

~ பன்னீர்செல்வம்

# ஸ்ரீஹயக்ரீவ மகிமை

மகான் ஸ்ரீவாதிராஜர்! ஹயக்ரீவரை பன்முறைகள் நேருக்குநேராகத் தரிசித்தவர். அவர் ஸ்வாமிக்காகத் தயாரிக்கப்பட்ட நைவேத்தியத்தை ஒரு தட்டில் வைத்து, இரு கைகளாலும் பிடித்து, தன் தலைக்குமேல் வைத்துக் கொள்வார்.

அவருக்குப் பின்புறமாக ஹயக்ரீவர் வெண்மயான குதிரைவடிவில் வந்து, தன் முன்னங்கால்கள் இரண்டையும் தூக்கி,ஸ்ரீவாதிராஜரின் தோள்களின்மீது வைத்தபடி, நைவேத்தியத்தை முழுவதுமாக உண்ணமல் கொஞ்சம் மீதம் வைப்பார். அந்த மீதியை ஸ்ரீவாதிராஜர் உண்பார். அன்றாட நிகழ்ச்சி இது.

ஸ்ரீவாதிராஜரிடம் பொறாமை கொண்ட சிலர், ஒருநாள் நைவேத்தியத்தில் விஷம் கலந்தார்கள். "வழக்கப்படி மீதிப்பிரசாதத்தை வாதிராஜர் உண்பார்.அவர் வாழ்நாள் முடிந்துவிடும்" என்பது பொறாமை காரர்களின் எண்ணம்.



வழக்கப்படி, ஸ்ரீவாதிராஜர் நைவேத்தியத்தைத் தாங்கி நிற்க, பின்புறமாக வந்த ஹயக்ரீவர் அன்று எதுவும் மீதி வைக்காமல்,முழுவதுமாக உண்டுவிட்டார். அதை உணர்ந்த ஸ்ரீவாதிராஜர், "இன்று ஏதோ நடந்திருக்கிறது" என்று நினைத்தார். அதே வேளையில் குதிரை(ஸ்வாமி)யும் மயங்கிக் கீழே விழுந்தது.

பகவானைத் தியானித்த ஸ்ரீவாதிராஜர் "வாதிராஜகுள்ளா" எனும் ஒருவகைக் கத்தரிக்காயை வேகவைத்துக்குதிரைக்குக் கொடுத்தார்; விஷம் நீங்கித் துள்ளிக்குதித்து எழுந்தது குதிரை.

பக்தரைக் காப்பதற்காகப் பகவான் நடத்திய அருளாடல் இது.

ஸ்ரீவாதிராஜர் நைவேதித்த "ஹயக்ரீவ பண்டி" எனும் அந்த நைவேத்தியத்தைத் தயாரித்து, ஹயக்ரீவரின் அவதாரத் திருநாளான ஆவணிமாதத் திருவோணத்தன்று ஹயக்ரீவருக்கு நைவேத்தியம் செய்து வழிபட்டால் ஆயுள், ஆரோக்கியம், கல்வி, செல்வம் ஆகியவற்றைப்பெற்று மேன்மை அடையலாம்.

~ சொல்லில் செல்வன் PN பரசுராமன்

# சந்தான திதி அறிந்து கொள்வோம்!

சந்திரனுடைய பாகையிலிருந்து சூரியனுடைய யாகையை கழித்து மீதி வந்த தொகையை 5 ஆல் பெருக்கி, 12ஆல் வகுத்து வந்த தொகை சந்தான திதி என்று அறிந்து கொள்வோம் இந்த திதி வளர்பிறையில் வந்தால்,

1. பிரதமை முதல் பஞ்சமி வரை - புத்திர பேரு சந்தேகம்
2. சஷ்டி முதல் தசமி - புத்திர பேரு உண்டு
3. ஏகாதசி முதல் பௌர்ணமி வரை - புத்திர பேரு நிச்சயம் உண்டு

சந்தான திதி தேய்பிறையில் வந்தால்,

1. பிரதமை முதல் பஞ்சமி - புத்திர பேரு உண்டு
2. சஷ்டி முதல் தசமி - புத்திர பேரு உண்டு, பரிகாரம் செய்ய வேண்டும்.
3. சப்தமி முதல் தசமி - இரண்டாவது திருமதியின் மூலம் புத்திர பேறு
4. ஏகாதசி முதல் அமாவாசை - பரிகாரம் செய்தாலும் பயன் இல்லை

இந்த சந்தான திதி கணக்கீடு ஆண் பெண் இருவருக்கும் பார்க்க வேண்டும். மேலும் இதுவே இறுதியான முடிவு அல்ல. ஷட்பலத்தில், ஆண், பெண் இருவருக்கும் 5 ஆம் பாவ அதிபதியின் பலத்தை பார்க்க வேண்டும். மேலும் இருவருக்கும் குரு, சுக்கிரனின் பலம் காண வேண்டும்.

Formula for Finding sandhama degree
(moondegree - sun degree) x5

உதாரணம் ;

சூரியனின் பாகை = 29° 32” (ரிஷபத்தில்)

மேஷத்திலிருந்து 30 + 29° 3” = 59.32

சந்திரனின் பாகை = 12.54 (மேஷத்தில்)

தேய்பிறை

இங்கு சந்திரனின் பாகை சூரிய பாகையை விட குறைவாக உள்ளதால், 360° கூட்டவும்.

Moon degree = 360° + 12.54 = 372.54

சந்தான டிகிரி = (சந்திரனின் பாகை - சூரிய பாகை) x 5 / 12

$$= \frac{(372.54 - 59.32) \times 5}{12}$$

$$= \frac{313^{\circ}.22' \times 5}{12}$$

சந்தான டிகிரி $= \frac{1566.10}{12} = \boxed{130.50} \sim 130^{\circ}5$

இது வளர்பிறை ஏகாதசியில் வருகிறது

| குழந்தை நிச்சயம் உண்டு |
|---|


$0^{\circ}$ - $180^{\circ}$ → வளர்பிறை

$0^{\circ}$ - $180^{\circ}$ → தேய்பிறை

($0^{\circ}$ - $12^{\circ}$ - பிரதமை, $12^{\circ}$- $36^{\circ}$ - துவிதியை, $36^{\circ}$ - $48^{\circ}$ - திரிதியை 1திதி = 12degree

~ லட்சுமி சிவக்குமார்

புவிக்குச் சார்பாக சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையிலான கோணமும் திதிகளும்




| | | | | | |
|---|---|---|---|---|---|
| சுக்கில பட்சம் | 1 | பிரதமை (0° - 12°) | கிருஷ்ண பட்சம் | 16 | பிரதமை (180° - 192°) |
| | 2 | துதியை (12° - 24°) | | 17 | துதியை (192° - 204°) |
| | 3 | திருதியை (24° - 36°) | | 18 | திருதியை (204° - 216°) |
| | 4 | சதுர்த்தி (36° - 48°) | | 19 | சதுர்த்தி (216° - 228°) |
| | 5 | பஞ்சமி (48° - 60°) | | 20 | பஞ்சமி (228° - 240°) |
| | 6 | சட்டி (60° - 72°) | | 21 | சட்டி (240° - 252°) |
| | 7 | சப்தமி (72° - 84°) | | 22 | சப்தமி (252° - 264°) |
| | 8 | அட்டமி (84° - 96°) | | 23 | அட்டமி (264° - 276°) |
| | 9 | நவமி (96° - 108°) | | 24 | நவமி (276° - 288°) |
| | 10 | தசமி (108° - 120°) | | 25 | தசமி (288° - 300°) |
| | 11 | ஏகாதசி (120° - 132°) | | 26 | ஏகாதசி (300° - 312°) |
| | 12 | துவாதசி (132° - 144°) | | 27 | துவாதசி (312° - 324°) |
| | 13 | திரயோதசி (144° - 156°) | | 28 | திரயோதசி (324° - 336°) |
| | 14 | சதுர்த்தசி (156° - 168°) | | 29 | சதுர்த்தசி (336° - 348°) |
| | 15 | பூரணை (168° - 180°) | | 30 | அமாவாசை (348° - 360° |



உங்கள் இல்லத்தில் வைதீக/ஆகம முறைப்படி யாகங்கள் மற்றும் சத்ய நாராயண பூஜை போன்ற அனைத்து பூஜைகளும் செய்து தர அணுகவும்
www.Priestservices.com
போன்: 95004 95008

# சூட்சம ஜோதிட குறிப்பு

திருமண நாள், தம்பதியர் இருவருக்கும் சந்திராஷ்ட நாளாக இருக்க கூடாது... இது அனைவரும் அறிந்ததே.. அதே போல், திருமண நாளன்று இருவரின் ராகு / கேது மீது கோச்சார சந்திரன் பயணம் செய்ய கூடாது.

---

பௌர்ணமி யோகத்தில் பிறந்தவர்களுக்கு பேரும் புகழும் தானே தேடி வரும்..
பங்கபடாத பௌர்ணமி சந்திரனின் பார்வை யை பெரும் கிரஹங்கள் சுபத்துவம் ஆகின்றன... அவற்றின் தசைகளும் சிறப்பாக இருக்கும்.


---

சுக்ரனும் புதனும் இனைந்து 1 / 7 இல் இருப்பது, மதன கோபால யோகம்..
நம் எதிர்பாலினரிடம் இத்தகைய ஜாதக அமைப்பு இருப்பின், அவர்களிடம் கவனமாக பழக வேண்டும்...
குரு / பௌர்ணமி சந்திரன் சேர்க்கை பார்வை இருப்பின் பலன்கள் மாறுபடும்...

---

ஒவ்வொரு நாம யோகமும் ஒரு நட்சத்திரத்தோடு தொடர்புடையது ( அவர்களின் அதிபதி ஒன்றாக இருக்கும் அடிப்படையில் )

---



மூலம் நக்ஷத்திரம் அதிகண்ட நாமயோகத்தோடு தொடர்பு உடையது..
அதி கண்டம் - அவிழ்க்க படாத முடிச்சுகள் / பெரிய இடர்கள்.
அந்த மூல நட்சத்திரத்தில் தான் தற்போது கேது உள்ளார்.

---

திதி சூன்ய ராசியில் சந்திரன் சஞ்சரிக்கும் நாட்களில்,
திதி சூன்ய ராசியில் அமர்ந்த கிரஹங்களின் நட்சத்திர நாட்களில்,
மற்றும் திதி சூன்ய ராசி லக்கினமாக நடைபெறும் சமயத்திலும்
சுப விஷயங்கள் செய்ய கூடாது....

---

உத்திராடம் நட்சத்திரத்தில் பிறந்தவர் கணபதி..
திருவோணத்தில் பிறந்தவர் மஹா விஷ்ணு.. இவர் சதா சயன கோலத்தில் இருப்பவர். எதை பற்றியும் கவலை கொள்ளா தோற்றம்.. ஆனால் உள்ளுக்குள் அனைத்தையும் அசைபோட்டு கொண்டிருப்பார்...
விநாயகரும் அவ்வாறே, மஞ்சளிலும் பிடிக்கலாம், மண்ணிலும் பிடிக்கலாம்.. எதற்கும் கவலை பட மாட்டார்..
அதே போல் இந்த அபிஜித் நட்சத்திரகாரர்கள் ( உத்திராடம் 2, 3, 4, திருவோணம் 1 ) எதற்கும் கவலை பட தேவை யில்லை, அவர்களுக்கு தானாகவே எல்லாம் கிடைக்கும்..
இந்த நட்சத்திர பாதங்கள் சூட்சம மானவை'

சூர்யன் பூராட நக்ஷத்திரத்தில் இருக்கும் போது தான் மஹாபாரத போர் நிகழ்ந்தது....
அதனாலேயே பூராடம் போராடும் என்று சொன்னார்கள்..
பாண்டவர்கள், பூராட நட்சத்திரத்தின் ஒரு சின்னமான குரங்கின் கொடியை வைத்து போரில் வெற்றி பெற்றனர்....

........................................................................................

கரண நாதனே காரிய சித்திக்கு உதவுவார்..
அதனால் நீங்கள் பிறந்த கரணம் வரும் நாளில் உங்கள் குலதெய்வத்தை பூஜித்தால் பலன்கள் அதிகமாக கிடைக்கும்...

........................................................................................

திருமண முகூர்த்தம் குறிக்கும் போது,
ஒரு முகூர்த்த லக்கினம் குறிக்கிறோம்.. அது 2 மணி நேரம் ஆகும்.. அந்த 2 மணி நேரத்தில் குறிப்பிட்ட 14 நிமிடங்கள் ஒரு நட்சத்திர பாதம் விழும்...
எந்த நட்சத்திர பாதம் சுப நவாம்சத்தில் விழுகிறதோ, அந்த நட்சத்திர பாத நேரத்தில் ( குறிப்பிட்ட 14 நிமிடங்கள் ), தாலி கட்டும் நேரமாக அமைத்து கொள்ளலாம்...

........................................................................................

வானவெளியில் குரு கிரகம் தன் ஈர்ப்பு விசையால் meteroids எனப்படும் வின் கற்கள் பூமியில் விழாமல் பார்த்து கொள்கிறது...
தனது கதிர் வீச்சினால் சூரிய கதிர்களின் வெப்பத்தை குறைத்து பூமியில் வாழும் உயிரினங்களுக்கு தகுந்த மாதிரி மாற்றம் செய்கிறது... அதனாலேயே ஜீவ காரகன் என்று அழைக்க படுகிறது..
அதிக பிராண சக்தியும் காந்த சக்தியும் கிடைக்கின்ற வட கிழக்கு ( ஈசான்ய ) மூலையின் அதிபதி குரு...
அத்தகைய குரு லக்கினத்தை பார்த்தால், பிராண சக்தியும் காந்த சக்தியும் அதிகமாகும்... அந்த மனிதரின் ஆரா நறிய தூரம் நீடித்திருக்கும். ஆரா ( மனித உடம்பை சுற்றி கண்ணுக்கு தெரியாத சக்தி களம்).

........................................................................................

உலகத்துக்கே தற்போது ராகு தசை நடந்து கொண்டு உள்ளது...
அதாவது, ஒவ்வொரு யுகத்திலும் மனிதர்களுக்கு உள்ளது போலவே பூமிக்கும் தசைகள் உண்டு..
அவ்விதம் இந்த கலியுகத்துக்கும் கடந்த செவ்வாய் தசையில் உலக போரெல்லாம் நடந்து, தற்போது ராகு தசை நடைபெற்று கொண்டுள்ளது.. வநஉாழெடழபல மூலம் ராகு உலகை ஆண்டு கொண்டுள்ளார்.. ஏனெனில் தசா நாதனே வலிமையானவர்..

ஆக, இந்த யுகத்தின் கடைசி தசை யான புதன் தசையில் கல்கி அவதாரம் நிகழலாம்...
இது என் தனிப்பட்ட கருத்து.

~ கோவை லெட்சிமி சிவா

# மந்திரங்களின் மகிமை

இன்றைக்கு இருக்கின்ற இளைஞர்களுக்கு மந்திரங்கள் என்ற சொல்லே ஏதோ ஏமாற்று வித்தை என்பதுபோல் தெரிகிறது. ஆனால், மந்திரங்கள் என்பனவை மகத்துவம் வாய்ந்தவை, நமது வேத சாஸ்திரங்களில் எழுத்துகள் எனப்படும் அட்சரங்களுக்கும் அவற்றை உச்சரிக்கும்போது எழுகின்ற ஓசை எனப்படும் ஒலிகளுக்கும் நிறைய சக்தியும் வளமையும் உண்டு அப்படிப்பட்ட சக்திமிகுந்த அச்சரங்களைக் கோர்த்து சொற்களை உருவாக்கி அவற்றுக்கு மந்திரவடிவம் கொடுத்தனர் நம் ரிஷிகள் அப்படிப்பட்ட மந்திரங்களை முறைப்படி ஒருவர் உச்சரிக்கும்போது அந்த ஓசையானது பிரபஞ்ச வெளியில் கலந்து மிதந்து, என்ன நோக்கத்திற்காக மந்திரம் உச்சரிக்கப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேற்றுகின்றன. இன்றைய வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றிற்கு என்ன அடிப்படியோ அந்த அடிப்படையிலேயே ரிஷிகள், வேதகாலத்தில் சக்திமிக்க மந்திரங்களை ,உருவாக்கி, அந்த மந்திரங்களினால் வேள்விகளை நடத்தி அசாத்திய சக்தியினால் பெற்றார்கள். இன்றைய காலகட்டத்திலும் நம்பிக்கையோடு அந்த மந்திரங்களைக்கூறி யாகங்களை செய்வதால் நாமும் நல்ல பலன்களை-சக்தியை அடையாளம் என்பது திண்ணம்.



~ பன்னீர்செல்வம்

# சரஸ்வதி யந்திரம்

பாதகமான கிரக காரணமாக கல்விப் பாதையில் பிரச்சினைகளை எதிர்கொள்பவர்கள் அல்லது புரிந்துகொள்ளவும் கற்றுக்கொள்ளவும் பலவீனமான மனநிலையைக் கொண்டவர்கள் சரஸ்வதி யந்திரத்தை இதயத்திலிருந்து வணங்கி சரஸ்வதி தேவியை வணங்க வேண்டும். சரஸ்வதி யந்திரம் அறிவாற்றல் மற்றும் புத்திசாலித்தனத்தை தெய்வீகமாகக் கொடுப்பவர், இது கற்றல் மற்றும் கல்வியின் மீது ஈடுபாடை ஏற்படுத்துகிறது. மேலும் மிக உயர்ந்த ஞானத்தை நோக்கி அழைத்துச் செல்கிறது. சரஸ்வதி யந்திரம் என்பது சரஸ்வதி தேவியின் யந்திரமாகும், அவர் ஞானத்தையும் புத்தியையும் தெய்வீகமாகக் கொடுப்பவர்.முழு பிரபஞ்சத்திலும் நிலவும் அனைத்து அறிவின் ஒரே தோற்றம். அதேபோல், சரஸ்வதி தெய்வத்தின் யந்திரம் அனைத்து ஞானத்தையும், புத்தியையும், புத்திசாலித்தனத்தையும் அளிக்கிறது. புரட்டாசி மாதம் புத பகவான் தன்னுடைய மூலத்திரிகோண வீட்டில் உச்சம் அடையும் போது விஜயதசமியை நாம் குழந்தைகளின் முதல் படிப்பை ஆரம்பிக்கிறோம். சரஸ்வதி தேவின் அருளுடன் துடங்கும் படிப்பினால் எதிர்காலத்தில் குழந்தைகள் நன்றாக படித்து நமக்கு நல்ல பெயர் வாங்கிக்கொடுப்பர்.



"ஸரஸ்வதி நமஸ்துப்யம் வரதே காமரூபிணி
வித்யாரம்பம் கரிஷ்யாமி ஸித்திர் பவதுமே ஸதா"

பொருள்:

சரஸ்வதி - தேவி சரஸ்வதி!

நம: துப்யம் ஸ்ரீ நமஸ்துப்யம் - உனக்கு நமஸ்கரங்கள்.

வருதே - வரம் தருபவளே!

காமரூபிணி - வேண்டியவற்றைத் தருபவளே!

வித்யா ஆரம்பம் ஸ்ரீ வித்யாரம்பம் - கல்வித் தொடக்கத்தை

கரிஷ்யாமி - செய்கிறேன்

சித்தி: பவது மே சதா - அனைத்தும் அடியேனுக்குச் சித்தி ஆகட்டும்!

~ ஜோதிடர் ஜெயம் ஜனார்தனன்

# ராகு கேது பெயர்ச்சி பலன்கள்

## ராகு பலன்கள் / பரிகாரம்

| ராசிகள் | நட்சத்திரங்கள் | ராகு பகவான் அமரும் இடம் | பலன்கள் சதவிகிதம் | பரிகாரம் |
|---|---|---|---|---|
| மேஷம் | அஸ்வினி, பரணி கார்த்திகை 1ம் பாதம் | 2 இடம் குடும்ப ஸ்தானம் | 70% | தினமும் துர்க்கை காயத்ரி 108 முறை பாராயணம் செய்யவும் |
| ரிஷபம் | கார்த்திகை 2,3,4 பாதம் ரோகினி மிருகசீரிடம் 1,2 பாதம் | ஜென்மஸ்தானம் | 80% | பரிகாரம் செய்யவும் திருநாகேஸ்வரம் ராகு பகவான் தரிசனம் |
| மிதுனம் | மிருகசீரிடம் 3,4 பாதம் திருவாதிரை புனர்பூசம் 1,2,3, பாதம் | 12 இடம் விரைய ஸ்தானம் | 50% | பரிகாரம் செய்யவும் திருப்பதி வெங்கடாசலபதி தரிசனம் |
| கடகம் | புனர்பூசம் 4ம் பாதம் பூசம், ஆயில்யம் | 11 இடம் லாப ஸ்தானம் | 96% | சுப பலன்கள் |
| சிம்மம் | மகம், பூரம் உத்ரம் 1ம் பாதம் | 10 இடம் தொழில் ஸ்தானம் | 94% | சுப பலன்கள் |
| கன்னி | உத்ரம் 2,3,4 பாதம் அஸ்தம் சித்திரை 1,2 பாதம் | 9 இடம் பாக்கிய ஸ்தானம் | 50% | பரிகாரம் செய்யவும் அனந்தசயன பெருமாள் தரிசனம் |
| துலாம் | சித்திரை 3,4 பாதம் சுவாதி விசாகம் 1,2,3 பாதம் | 8 இடம் அஷ்டமத்து ராகு | 50% | வெள்ளிகிழமை ராகு காலத்தில் நாகராஜாவுக்கு பால் அபிஷேகம் |
| விருச்சகம் | விசாகம் 4ம் பாதம் அனுஷம், கேட்டை | 7 இடம் மனைவி நட்பு ஸ்தானம் | 60% | பரிகாரம் செய்யவும் ஸ்ம்ஹிதேவி சமேத ராகு பகவான் தரிசனம் |
| தனுசு | மூலம், பூராடம் உத்திராடம் 1ம் பாதம் | 6 இடம் சத்ரு ஸ்தானம் | 90% | சுப பலன்கள் |
| மகரம் | உத்திராடம் 2,3,4 பாதம் திருவோணம் அவிட்டம் 1,2 பாதம் | 5 இடம் புத்திர ஸ்தானம் | 50% | பரிகாரம் செய்யவும் சனிக்கிழமை ராகு பகவான் தரிசனம் |
| கும்பம் | அவிட்டம் 3,4 பாதம் சதயம் பூரட்டாதி 1,2,3 பாதம் | 4 இடம் வீடு, வாகன ஸ்தானம் | 55% | பரிகாரம் செய்யவும் வெள்ளிக்கிழமை ஸ்ரீகாளி தரிசனம் |
| மீனம் | பூரட்டாதி 4ம் பாதம் உத்திரட்டாதி, ரேவதி | 3 இடம் தைரிய ஸ்தானம் | 93% | சுப பலன்கள் |

# கேது பலன்கள் / பரிகாரம்

| ராசிகள் | நட்சத்திரங்கள் | கேது பகவான் அமரும் இடம் | பலன்கள் சதவிகிதம் | கேது பரிகாரம் |
|---|---|---|---|---|
| மேஷம் | அஸ்வினி, பரணி கார்த்திகை 1ம் பாதம் | 8ம் வீடு அஷ்டமத்து கேது | 70% | தினமும் துர்க்கை காயத்ரி 108 முறை பாராயணம் செய்யவும் |
| ரிஷபம் | கார்த்திகை 2,3,4 பாதம் ரோகினி மிருகசீரிடம் 1,2 பாதம் | 7 இடம் மனைவி நட்பு ஸ்தானம் | 80% | பரிகாரம் செய்யவும் சித்ரலேகா தேவி சமேத கேது பகவான் தரிசனம் |
| மிதுனம் | மிருகசீரிடம் 3,4 பாதம் திருவாதிரை புனர்பூசம் 1,2,3, பாதம் | 6 இடம் சத்ரு ஸ்தானம் | 50% | சுப பலன்கள் |
| கடகம் | புனர்பூசம் 4ம் பாதம் பூசம், ஆயில்யம் | 5 இடம் புத்திர ஸ்தானம் | 96% | பரிகாரம் செய்யவும் சாய் பாபா தரிசனம் |
| சிம்மம் | மகம், பூரம் உத்ரம் 1ம் பாதம் | 4 இடம் சுக ஸ்தானம் | 94% | காளஹஸ்தி கேது பகவான் தரிசனம் |
| கன்னி | உத்ரம் 2,3,4 பாதம் அஸ்தம் சித்திரை 1,2 பாதம் | 3 இடம் தைரிய ஸ்தானம் | 50% | சுப பலன்கள் |
| துலாம் | சித்திரை 3,4 பாதம் சுவாதி விசாகம் 1,2,3 பாதம் | 2 இடம் குடும்ப ஸ்தானம் | 50% | காளஹஸ்தி கேது பகவான் தரிசனம் |
| விருச்சகம் | விசாகம் 4ம் பாதம் அனுஷம், கேட்டை | ஜென்மஸ்தானம் | 60% | பரிகாரம் செய்யவும் காளஹஸ்தி கேது பகவான் தரிசனம் |
| தனுசு | மூலம், பூராடம் உத்திராடம் 1ம் பாதம் | 12 இடம் மோட்ச ஸ்தானம் | 90% | சுப பலன்கள் |
| மகரம் | உத்திராடம் 2,3,4 பாதம் திருவோணம் அவிட்டம் 1,2 பாதம் | 11 இடம் லாப ஸ்தானம் | 50% | சுப பலன்கள் |
| கும்பம் | அவிட்டம் 3,4 பாதம் சதயம் பூரட்டாதி 1,2,3 பாதம் | 10 இடம் தொழில் ஸ்தானம் | 55% | சுப பலன்கள் |
| மீனம் | பூரட்டாதி 4ம் பாதம் உத்திரட்டாதி, ரேவதி | 9 இடம் பாக்கிய ஸ்தானம் | 93% | சதுரகிரிமலை சித்தர்கள் தரிசனம் |

~ மாரிமுத்து

# ஸ்ரீ திருமாலழகி ஸமேத
# ஸ்ரீ தாமோரப் பெருமாள் திருக்கோவில்

தாமல் - 631551 (காஞ்சிபுரம் மாவட்டம்).

சென்னை - வேலூர் நெடுஞ்சாலையில் சென்னையிலிருந்து சுமார் 85மீட்டர் தொலைவில் (காஞ்சிபுரத்திலிருந்து 15 கி.மீ, பாலு செட்டி சத்திரத்திலிருந்து (திருப்புட்குழி 3 கி.மீ.) உள்ளது ”தாமல் என்ற அழகான, செழிப்பான கிராமம்.

இவ்வூரிலுள்ள ”ஸ்ரீ திருமாலழகி ஸ்மேத ஸ்ரீ தாமோதரப் பெருமாள் கோவில் மிகவும் தொன்மை வாய்ந்ததாகும்.

## ஸ்தல புராணம்

திருமாலின் பன்னிரு நாமங்கள் கேசவன், நாராயணன், மாதவன், கோவிந்தன், விஷ்ணு, மதுசூதனன், திருவிக்ரமன், வாமனன், ஸ்ரீதரன், ரிஷிகேசன், பத்மநாபன், தாமோதரன் என்பதாகும்.

அநேக ஊர்களில் மேற்கண்ட நாமங்களைக் கொண்ட நாரணன் கோவில்கள் அமைந்துள்ளதை அடியார்கள் அறிந்திருப்பர்.

வெண்ணை திருடும் கோபாலனாக இருந்த குட்டிக் கண்ணன் மீது அக்கம் பக்கத்தவர்கள் குறை சொல்லிக்கொண்டே இருந்தார்களாம். பார்த்தாள் யசோதை. கயிற்றை எடுத்து கண்ணனை கட்ட முயன்றாளாம். அன்புக்குக் கட்டுப்பட்டவன் கயிற்றுக்கா கட்டுப்படுவான். மனம் நெகிழ்ந்த யசோதை மாலவனையே நினைத்து ஒருவாறு உரலிலே கட்டிப்போட்டு விட்டாள். அப்போதும் மாயக்கண்ணனின் விளையாட்டிற்கு யார்தான் கட்டுப்படமுடியும்? உரலுடன் இரண்டு மரங்களுக்கு இடையே புகுந்து இரு





தேவர்களுக்கு சபா விமோசனம் அளித்தருளினான். ஈரேழு பதினான்கு உலகங்களும்  வியந்தன. கண்ணனின் வயிற்றில் கயிறு பதிந்த வடு ஏற்பட்டது. அப்போதிலிருந்து, கண்ணனுக்கு "தாமோதரன்" என்ற திருப்பெயரும் , புகழும் ஏற்பட்டது.

தாம என்றால் கயிறு அல்லது தாம்பு என்று பொருள். உதரன் என்றால் வயிறு என்று பொருள். அதாவது கயிற்றால் கட்டப்பட்ட வயிறை உடையவன் என்று அர்த்தம்.

கண்ணனின் இந்த லீலையில் மனதைப் பறிகொடுத்த மகரிஷிகள் இப் பூவுலகில் அதே திருப்பெயருடன் எழுந்தருளி மக்களை ரட்சிக்க வேண்டும் என்று பிரார்த்தித்தனர். அவர்களின் பிரார்த்தித்தனர். அவர்களின் பிரார்த்தனையை ஏற்ற பகவான், ஸ்ரீ மஹாலக்ஷ்மியுடன் "தாமல்" என்ற திருத்தலத்தில் எழுந்தருளியனான். யசோதையின் அன்பிற்குக் கட்டுப்பட்ட கண்ணன், மகரிஷிகளின் பிரார்த்தனைக்கும் கட்டுப்பட்டான்.

தாமல் கிராமத்தில் எழுந்தருளியுள்ள தாமோதரன் கோவிலில் மூலவர் தாமோதரன் இன்றும் வயிற்றில் தழும்புடன் காட்சி தருவது மிக விசேஷமாகும் (மூலவருக்கு திருமஞ்சன காலத்தில் அர்ச்சகாள் ஏகாந்தமாக ஸேவிக்கும் பாக்கியம்). வேறு எங்குமில்லாமல் "தாமோதரன்" என்ற பெயருடன் இங்கு மட்டும்தான் பெருமாள் காட்சியளிப்பது இக்கோவிலின் தினச் சிறப்பாகும்.

தாமோதரப் பெருமாள் மூலவர் மற்றும் உத்ஸவர் உபய நாச்சிமார்களோடு காட்சியளிப்பதோடு மட்டுமல்லாமல், பெருமாள் நெற்றியிலே "கஸ்தூரி திலகத்துடன்" காட்சி தருவது இத்தலத்தின் தொன்மையான வழிமுறைக்கு எடுத்துக் காட்டாய் விளங்குவதோடு மட்டும்மல்லாமல், "கஸ்தூரி திலகத்துடன்" " காட்சி  தரும் பாண்டுரங்க விட்டலனையும் ஞாபகப்படுத்துகிறான் எனலாம்.

பொதுவாக வைணவத்தில் யஎம்பெருமான்கள் ஸன்னிதியில் நெற்றியில் திருமண, ஸ்ரீ சூர்ணத்துடன் தானே காட்சியளிப்பான். இங்கு மட்டும் ஏன் "கஸ்தூரி திலகத்துடன்" காட்சி தருகிறான் என்ற சந்தேகம் நமக்கு ஏற்படுகிறது. அதற்கு விடையளிக்கிறது இக்கோயிலின் ஸ்தல புராணம்.

சுமார் 1000 ஆண்டுகளுக்கு முன் இத்திருக்கோயிலில் மத்வ ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்தவர்களால் ஆராதனை செய்யப்பட்டு வந்ததாகவும், காலப்போக்கில் வைணவர்களுக்கு தானமாக வந்ததால் "தனமல்லபுரம்" என்று இருந்து பின் மருவி "தாமல்" என்று அழைக்கப்பட்டு வருவதாகவும் தெரிகிறது. இன்றும் மத்வர்களுக்கு மதிப்பு கொடுக்கும் வகையில் பெருமாள் உற்சவர் நெற்றியில் திருமண் ஸ்ரீசூர்ணத்திற்கு பதிலாக தினமும் கஸ்தூரி திலகத்துடன்  காட்சியளிக்கிறார். மூலவர் தாமோதரன் பிரதி மாதம் ரோஹிணி நட்சத்திரத்தன்று மட்டும் நெற்றியில் திருமண் ஸ்ரீசூர்ணத்திற்கு பதிலாக கஸ்தூரி திலகத்துடன், ராஜ அலங்காரத்துடன் காட்சியளிப்பது கண் கொள்ளாக் காட்சியாகும்.

புன் சிரிப்புடன் சற்றே குறும்புடன் காட்சி தரும் "தாமோதரன்" கால்களில் பளபளவென்று கொலுசு, ஏன்

கொலுசு? குழந்தை பாக்கியம் வேண்டுபவர்கள் தாமோதரப் பெருமாளுக்கு கொலுசு அணிவிப்பதாக வேண்டிக் கொண்டால் கண்ணனின் கருணைப் பார்வை பிறக்கும். பிரார்த்தனை நிறைவேறியதும் கொலுசு வாங்கி சாத்தலாம்.

நான்கு திருக்கரங்களில் முறையே சங்கு, சக்கரம், வரத ஹஸ்தம், ஊறு ஹஸ்தத்துடன் நின்ற திருக்கோலத்தில் ஸேவை சாதிக்கும் மூலவர் தாமோதரப் பெருமாளின் அழகிற்கு ஈடாக எதையும் கூற முடியாது .

தனிக்கோவில் நாச்சியாரிடமும் ஒரு தனிச்சிறப்பு. பெயரே தூய தமிழில் "ஸ்ரீ திருமாலழகி என்ற திருநாமத்துடன், அழகுடன் திவ்ய தரிசனம் தருகிறாள்.

இத்தலத்து நாயகன் "கேட்டது கொடுக்கும்" தாமோதரனாகவும், நாயகி "கேட்டதும் கொடுக்கும்" திருமாலழகியாகவும் இங்கு கோவில் கொண்டு அடியார்களின் பிராத்தனைகளை பூர்த்தி செய்து வருகிறார்கள். மிக வரப்பிரஸாதி.

இவ்வூரிலுள்ளவர்களும், இவ்வூரிலிருந்து வெளியூர் மற்றும் வெளிநாடு சென்றுள்ளவர்களும் இப்பெருமாள் மற்றும் பிராட்டி மீது பற்று கொண்டவர்களாய் இக்கோயிலில் நித்யப்படி பூஜைகளையும் மற்றும் உற்சவங்களையும் மிகவும் சிறப்பாக கொண்டாடி வருகிறார்கள்,

# உற்சவங்கள்



சித்திரை மாதம் : குதிரை வாஹனம்
மஹாசாந்தி ஹோமம்
கோடை உற்சவம்

வைகாசி : வஸந்த உற்சவம்

ஆனி : தாமோதரப் பெருமாள் லட்சார்ச்சனை
கருடஸேவை
அன்னக்கூட திருப்பாவாடை உற்சவம்
சேஷ வாஹனம்

ஆடி : தாயார் திருவிளக்கு பூஜை

ஆவணி : பவித்ர உற்சவம்

புரட்டாசி : மாதம் முழுவதும் ஸ்ரீநிவாஸன் திருக்கோலம்.
திருமலையானை நேரில் ஸேவிக்க முடியாதவர்களுக்கு
திருமலையானாக ஸேவை.

ஐப்பசி : தீபாவளி

கார்த்திகை : பக்த ஆஞ்சநேயர் லட்சார்ச்சனை

| | |
|---|---|
| மார்கழி | : ஸ்ரீ ஆண்டாள் போகி உற்சவம் |
| தை | : தாயார் லட்சார்ச்சனை<br>ஸ்ரீ ஸீக்த ஹோமம் |
| மாசி | : மாசி மகம் |
| பங்குனி | : பங்குனி உத்திர திருக்கல்யாணம் உற்சவம் |

## ஸ்ரீ திருமாலழகி ஸமேத ஸ்ரீ தாமோரப் பெருமாள் திருக்கோவில் தாமல் – 631551 (காஞ்சிபுரம் மாவட்டம்).

| | |
|---|---|
| சேஷத்ரம் | - தாமல் |
| பழைமை | - சுமார் 1000 வருடங்கள் |
| பெருமாள் | - மூலவர் - தாமோதரன் நின்ற திருக்கோலம் நான்கு கைகளில் முறையே சங்கம், சக்கரம், வரத ஹஸ்தம், ஊறு ஹஸ்தம். ஸாளிக்கிராம ஹாரம்<br>தசாவதார ஹாரம்<br>உற்சவர் - மந்தஸ்மித பாரிஜாதன் தாமோதரன் |
| தாயார் | - ஸ்ரீ திருமலாழகி, விஷ்ணு சுந்தரி தனிக்கோவில் நாச்சியார் |
| விமானம் | - வைகாநஸா விமானம் |
| தீர்த்தம் | - விபுல ஸரஸ், ஸர்ப்ப தீர்த்தம் |
| ஸ்தல விருக்ஷம் | - வில்வம், புன்னை |

கோவில் திறந்திருக்கும் நேரம் - காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை (அர்ச்சகர் அங்கேயே இருப்பதால் ஸேவை நேரம் காலை முதல் இரவு வரை)

~ T.C. ஸ்ரீதரன்



Yearlong Offerings to Your Ancestors Invoke Immediate & Lasting Relief for You, Your Children and Your Ancestors

Call: 95004 95008




# மேஷம்

- உங்கள் கௌரவம், புகழ், செல்வாக்கு மேலோங்கி இருக்கும்
- வேலையில் கவனம் தேவை.
- உயரதிகாரிகளிடம் அதிக உரிமை எடுத்து கொள்ள வேண்டாம்
- எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது
- குடும்பத்தில் பெண்களால் மகிழ்ச்சி உண்டாகும்
- தொழில் துறையில் மிகச்சிறப்பாக செயல்படுவீர்கள்
- பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகமாகும்
- ஜீவனம் நன்றாக இருக்கும்
- குடும்பத்தில் நல்ல சந்தோஷம் நிலவும்
- பணவரவு மிகச்சிறப்பாக காணப்படும்
- சகோதரர்களிடம் கவனமாக இருக்கவேண்டும்
- அரசாங்கம் சம்பந்தப்பட்ட காரியங்கள் கைகூடும்.
- செய்தொழிலில் நல்ல லாபங்கள் கிடைக்கும்.
- ஸ்ரீ முருக பெருமான் மற்றும் ஸ்ரீ ஆதிஷேசன் வழிபாடு, பூஜை மற்றும் ஆலயங்கள் சென்று வழிபடுதல்.
- செவ்வாய், சனி, குரு, ராகு, கேது பகவானுக்கு ஹோமம், பூஜை செய்து வழிபடுதல்.
- பழைமையான ஆலயங்களுக்கு புனித யாத்திரை செல்லுதல். கோவிலுக்கு திருப்பணி செய்தல்



Special Birthday Ritual Packages for You
Get 40% OFF
Call: 95004 95008




# ரிஷபம்

- இந்த மாதம் தன வரவு சுமாராக இருக்கும்.
- உடல் நல பாதிப்புகள் ஏற்படும்.
- குடும்பத்தில் மனநிம்மதி இன்மையும் ஏற்படும்.
- குழந்தைகள் நன்றாக படிப்பதால் ஆனந்தம் அடைவார்கள்.
- உங்கள் புகழ் மற்றும் கௌரவம் சிறப்பாக இருக்கும்.
- மற்றவர்கள் உங்கள் செயல்களினால் உங்களுக்கு எதிரிகளாவர்கள். உடலில் ஆரோக்கிய குறைபாடுகள் வந்து நீங்கும்.
- வெளியூர் பயணங்களால் செலவு அதிகமாக செய்வீர்கள்.
- ஆன்மீக பயணங்கள் செல்வீர்கள்.
- செய்யும் தொழிலில் லாபம் உண்டாகும்.
- காரிய தடங்கல்கள் ஏற்பட்டு விலகும்.
- சிலருக்கு புதிய நண்பர்கள் கிடைப்பார்கள்.
- தந்தைக்கு ஆரோக்கியமான உடல்நிலை அமையும்.
- காதல் வாழ்க்கையில் பிரிவினைக்கு வாய்ப்பு உள்ளது.
- குடும்பப் பிரச்சனைகளைத் தீர்ப்பதில் பொறுமையைக் கடைபிடிக்க வேண்டும்.
- வாழ்க்கைத்துணையுடன் உறவு நன்றாக இருக்கும்.

## பரிகாரம்:

- ஸ்ரீ லக்ஷ்மீ நரசிம்மர் மற்றும் சித்தர்கள் வழிபாடு, பூஜை மற்றும் ஆலயங்கள் சென்று வழிபடுதல்.
- ஸ்ரீ சுக்கிரன், சனி, குரு, ராகு, கேது பகவானுக்கு பூஜை, ஹோமம் செய்து வழிபடுதல்.
- வாழும் சித்தர்கள் தரிசனம், நாய்க்கு உணவு அளித்தல், கோவிலுக்கு திருப்பணி செய்தல்.

# மிதுனம்



- இந்த மாதம் உடல் நலனில் சிறப்பு கவனம் தேவைப்படலாம்.
- பணம் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் மற்றவர்களிடம் மனகசப்பு ஏற்படலாம்.
- எதிரிகளால் தொல்லை ஏற்படும்.
- எந்த ஒரு தொழிலிலும், செயலிலும் தெளிவு இல்லாமல் காணப்படுவீர்கள்.
- உடல் நிலையிலும், மன நிலையிலும் அக்கறை தேவை. பலவிதமான குழப்பங்கள் ஏற்ப்படும்.
- நீங்கள் பலவீனத்தால் பாதிக்கப்படலாம்.
- குடும்பத்தில் செலவுகள் அதிகரிக்கக்கூடும், அதேபோல் லாபமும் அதிகரிக்க கூடும்.
- கீழே பணிபுரிபவர்களின் தவறான அபிப்ராயங்கள், முயற்சியால் விலகும்.
- குடும்ப விஷயங்களை மென்மையாக அணுகுவது நல்லது.
- காதல் வாழ்க்கை பொறுத்தவரை இந்த மாதம் சுமாரான மாதமாகும், இருந்தாலும் புதிய தொடர்புகள் ஏற்படும்.

## பரிகாரம்:

- ஸ்ரீ ஆஞ்சநேயர் வழிபாடு மற்றும் ஆதிஷேசன் வழிபாடு பூஜை மற்றும் ஆலயங்கள் சென்று வழிபடுதல்.
- புதன், சனி, குரு, ராகு, கேது பகவானுக்கு பூஜை, ஹோமம் செய்து வழிபடுதல்.
- ஏழை, எளியோர், மாற்று திறனாளிகளுக்கு அன்னதானம் மற்றும் உதவி செய்தல். ரத்த தானம் செய்தல்.



# கடகம்

- நீங்கள் மேற்கொள்ளும் எல்லா  செயல்களிலும் சாதாரண பலன்களே கிட்டும்
- கடுமையான வேலைப்பளுவால் உங்கள் தனிப்பட்ட தேவைகளுக்கு நேரம் ஒதுக்க முடியாமல் இருக்கலாம்
- மருத்துவ செலவுகளும் ஏற்படலாம்
- பொருளாதாரம் சம்பந்தமான விஷயங்களில் முன்னேற்றம் காணப்படும்.
- பல்வேறு பணிகள் ஒரே நேரத்தில் செய்ய வேண்டிய சூழ்நிலையில் கவனமாக நடந்து கொள்ளவும்.
- தொழில்சார்ந்த பணிகளில் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்
- தேவையான நேரங்களில் உங்களுடைய கூர்மையான அறிவாற்றல் உங்களுக்கு கை கொடுக்கும்
- குடும்ப வாழ்வில் கருத்து வேறுபாடுகள் எழுவதற்கு வாய்ப்பு உண்டு.
- காதலர்களுக்கு இந்த மாதம் அனுகூலமான காலமாகும்.
- காதல் விவகாரங்களில் அன்பும், பாசமும் நிறைந்து காணப்படும்.
- ஆரோக்கியம் கவனமாக இருக்கவும
- மாணவர்களுக்கு நல்ல மாதமாக இருக்கும்
- ஊக்கமும், விரைவில் கற்றுக் கொள்ளும் திறனும் உங்களிடம் இருக்கும்.
- இந்த நல்ல குணங்கள்,சிறந்த கல்விபெற உங்களுக்கு உதவும்.





AMRTA KARUNA SYRUP

Control Infection Caused due to Bacteria or Virus

Call: 95004 95008

CLINICALLY PROVEN



# சிம்மம்

- இந்த மாதம் எல்லா விதங்களிலும் நல்ல வளர்ச்சி பெரும் மாதமாகும்.
- தொழில் ரீதியாக, நன்மை பயக்கக்கூடிய வாய்ப்புகள் உருவாகும். சூழ்நிலைகள், சில சமயங்களில், உங்கள் பொறுமையை சோதிக்கலாம். எளிதில் நம்பிக்கை இழக்காதீர்கள்.
- உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.
- உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் காணப்படும்.
- தாயின் உடல்நிலையில் முன்னேற்றம் காணப்படும்.
- பணிபுரிபவர்களுக்கு பதவியில் முன்னேற்றம் ஏற்படும்.
- இவை வருங்காலத்தில் உங்களுக்கு நல்ல ஆதரவை அளிக்கும்.
- கடினமாக உழைத்து, அதிக உற்பத்தித் திறனை அடையும் காலம் இது. குடும்ப விஷயங்களில் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

## பரிகாரம்:

- குருவாயூர் கிருஷ்ணன்மற்றும் திருக்கடையூர் அபிராமி வழிபாடு, பூஜை மற்றும் ஆலயங்கள் சென்று வழிபடுதல்.
- சூரிய பகவான், குரு, சனி, ராகு, கேதுவுக்கு பூஜை, ஹோமம் மற்றும் ஆலயங்கள் சென்று வழிபடுதல்.
- கோவில்களுக்கு திருப்பணி செய்தல்.



# கன்னி

- இந்த மாதம் சுமாரான பலன்கள் நடைபெறும்.
- உடல் நலனில் முன்னேற்றம்  காணப்படும்.
- பணவரவு நன்றாக இருக்கும்.
- சகோதர வழியில் பலன்களை அடைவீர்கள்.
- தாயின் உடல் நிலையில் கவனம் தேவை.
- திருமண வாழ்க்கையில் தடங்கல்கள் காணப்படும்.
- மனைவியின் உடல்நிலையில் கவனம் தேவை.
- சிறுது கஷ்டங்கள் இடையிடையே வந்து போகும்.
- தந்தையின் உடல் நலம் நலமாக இருக்கும்.
- வாகனங்கள் வாங்க வாய்ப்பு உண்டாகும்.
- வேலையில் இடமாற்றங்கள் ஏற்படும்.
- தொழில் சாதாரணமாக நடை பெறும்.
- செய்யும் தொழிலில் லாபங்கள் தடைபடும்.
- குடும்பத்துடன்  வெளியூர் பயணங்கள் ஏற்படும்.
- மனைவியின் உடல் நிலையில் கவனம் தேவை.

## பரிகாரம்:

- குருவாயூர் கிருஷ்ணன் மற்றும் சித்தர்கள் வழிபாடு, பூஜை மற்றும் ஆலயங்கள் சென்று வழிபடுதல்.
- குரு, சனி, ராகு, கேது பகவான் பூஜை மற்றும் ஆலயங்கள் சென்று வழிபடுதல்.
- ஏழை குழந்தைகளின் கல்விக்கு உதவுதல், ஆதரவற்ற அனாதை குழந்தைகளுக்கு உணவு அளித்தல்.



# துலாம்

- இந்த மாதம் சிறப்பான மாதமாகும்.
- தன வரவு தாராளமாக இருக்கும்.
- தொழில் துறையில் அதிகமான லாபங்களை பெறுவீர்கள்.
- இருந்தாலும் சிறுது மந்தமாகவும் காணப்படும்.
- இளைய சகோதரனால் நன்மைகள் ஏற்படும்.
- தாய் வழியில் சொத்துக்கள் வந்தடையும்.
- காதல் விவகாரங்களை இந்த மாதம் தள்ளி போடுவது நல்லது.
- வேலை செய்யும் இடத்தில் பதவி உயர்வு மற்றும் ஊதிய உயர்வு வர வாய்ப்புக்கள் அதிகம்.
- கணவன், மனைவி உறவு திருப்திகரமாக இருக்கும்.
- இல்லறம் இனிக்கும்.
- திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும்.
- தகப்பனாரின் உடல்நிலையில் முன்னேற்றம் காணப்படும். தகப்பனருடனான கருத்து வேறுபாடுகள் நீங்கும்.
- வெளியூருக்கு உல்லாச பயணங்கள் செல்ல நேரிடும்.

## பரிகாரம்:

- ஸ்ரீ மஹாலக்ஷ்மி மற்றும் ஸ்ரீ ராகவேந்திரர் வழிபாடு, பூஜை மற்றும் ஆலயங்கள் சென்று வழிபடுதல்.
- சனி, குரு, ராகு, கேது ஹோமம், பூஜை செய்து வழிபடுதல்.
- பசு மற்றும் கால்நடைகளுக்கு உணவு அளித்தல். பெற்றோரின் ஆசீர்வாதம் பெற்று பணிவிடை செய்தல்.




# விருச்சிகம்

- இந்த மாதம் மத்திமமான பலன்களை தரும்.
- எடுக்கும் கரியங்களிலும், செயல் பாடுகளிலும் சிறு, சிறு பிரச்சினைகளையும், தடங்கல்களையும் சந்திக்க நேரிடும்.
- இருப்பினும் இறுதி வெற்றி உங்களுடையதாக இருக்கும்.
- உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.
- சிறு உடல் நிலை பாதிப்பு எனினும், சுய மருத்துவம் பார்க்காமல் உடனடியாக மருத்துவரை அணுகுவது நல்லது.
- யாரிடமும் விரோதம் பாராட்ட வேண்டாம்.
- பொருளாதார நிலை நிறைவை தரும்.
- குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.
- சகோதர சகோதரிகளிடம் முரண்பாடு இருந்தாலும், ஆதாயம் உண்டு.
- சில நேரங்களில் மன சோர்வு வந்து நீங்கும்.
- கணவன் மனைவிடையே மனக்கசப்பு இருந்தாலும் தன வரவு உண்டு.
- தொழில் மற்றும் பணியில் உங்கள் தனித்திறன் வெளிப்படும்.
- பதவி உயர்வு, ஊதிய உயர்வு உண்டு.

## பரிகாரம்:

- ஸ்ரீ முருக பெருமான் மற்றும் ஸ்ரீ ஆதிசேஷன் வழிபாடு, பூஜை மற்றும் ஆலயங்கள் சென்று வழிபடுதல்.
- செவ்வாய், சனி, குரு, ராகு, கேதுவுக்கு பூஜை மற்றும் ஹோமம் செய்து வழிபடுதல்.
- முருக பெருமான் ஆலயத்தில் சர்க்கரை பொங்கல் தானம் செய்தல். பாம்பு புற்றுக்கு பால் வார்த்தல்.



# தனுசு

- இந்த மாதம் நற்காலமாகும்.
- சோதனைகள் பல வந்தாலும் சாதனை படைக்கும் காலமாகும்.
- உங்களின் ஆற்றலை நீங்களே புரிந்து கொள்வீர்கள்.
- பொருளாதார நிலையில் ஏற்ற, இறக்கங்கள் காணப்படும்.
- குடும்ப விஷயங்களில் கவனம் தேவை.
- வீண் பேச்சை தவிர்க்கவும்.
- சகோதர, சகோதரிகளால் நன்மை உண்டு.
- தாய் மற்றும் உறவினர்களால் ஆதாயம் உண்டு.
- புதிய வீடு, வாகன சொத்து வாங்கும் சூழல் உண்டாகும்.
- குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.
- பூர்வீக சொத்து பிரச்சினைகள் சாதகமாகும்.
- கணவன் மனைவியிடையே கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும்.
- தந்தை வழியில் அனுகூலம் உண்டு.
- ஆன்மீக பயணங்கள் செல்ல வாய்ப்பு அதிகம்.
- தொழில் மற்றும் வேலையில் நல்ல முன்னேற்றம் உண்டு.
- பதவி உயர்வு, ஊதிய உயர்வு உண்டு. புதிய பொறுப்பு வந்து சேரும்.

## பரிகாரம்:

- ஸ்ரீ லக்ஷ்மீ நரசிம்மர் வழிபாடு மற்றும் குரு பகவான் வழிபாடு, பூஜை மற்றும் ஆலயங்கள் சென்று வழிபடுதல்.
- சனி, குரு, ராகு, கேதுவுக்கு பூஜை, ஹோமம் செய்து வழிபடுதல்.
- ஏழை பெண்களின் திருமணத்துக்கு உதவி செய்தல். பசுவுக்கு அகத்திகீரை வழங்குதல்.



# மகரம்

- இந்த மாதம் சுமாரான பலன்களையே பெறுவீர்கள்.
- சில நேரங்களில் மன குழப்பமும், செயல்களில் தடுமாற்றமும் ஏற்படும்.
- அவசரபட்டு எந்த முக்கிய முடிவையும் எடுக்காமல், நிதானமாக செயல் படுங்கள். புதிய விஷயங்களில் தலையிட வேண்டாம்.
- வெளியூர் பயணங்களை தவிர்ப்பது நல்லது.
- கணவன் மனைவிக்குள் நெருக்கம் அதிகரிக்கும்.
- காதல் விஷயங்களில் கவனம் தேவை.
- தாய் மற்றும் உறவினர்களால் ஆதாயம் உண்டு.
- வீடு, வாகன சேர்க்கைக்கான முயற்சிகள் கைகூடும்.
- உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிறு சிறு உடல் உபாதைகள் வந்து நீங்கும்.
- எதிர்பாராத செலவீனங்கள் உண்டு.
- முயற்சிகளில் தடைகளும், பிரச்சினைகளும் உண்டாகும்.
- புனித ஆலயங்களுக்கு யாத்திரை செல்வீர்கள்.

## பரிகாரம்:

- ஸ்ரீ ஆஞ்சநேயர் மற்றும் சனி பகவான் வழிபாடு, பூஜை மற்றும் ஆலயங்கள் சென்று வழிபடுதல்.
- சனி, குரு, ராகு, கேதுவுக்கு பூஜை, ஹோமம் செய்து வழிபடுதல்.
- வயதானவர்கள், மாற்று திறனாளிகள், ஆதரவற்ற குழந்தைகளுக்கு உதவுதல்.



# கும்பம்

- எதிலும் பொறுமையுடனும், கவனமுடனும் இருப்பது அவசியம்
- உங்களுக்கு தைரியம் ஒன்றே துணையாகும்
- வீண் செலவுகளை தவிர்ப்பது அவசியம்.
- யாரையும் முழுமையாக நம்ப வேண்டாம்
- பண இழப்பு,துரோகம், ஏமாற்றம் ஏற்பட வாய்ப்புள்ளதால் கவனம் தேவை.
- மறைமுக எதிர்ப்புக்கள் வந்து நீங்கும்.
- பொறுமையுடன் கவனித்து, சாம, பேத, தான, தண்ட உபாயங்களை பயன்படுத்துவது நல்லது
- குடும்பத்தினரால் மகிழ்ச்சி உண்டாகும்
- பொருளாதார நிலையில் ஏற்ற, இறக்கங்கள் உண்டாகும்
- தாய் மற்றும் உறவினர்களைடையே கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும்.
- குழந்தைகள் விஷயத்தில் கவனம் தேவை
- தொழில் மற்றும் பணியில் அமைதி நிலவும்.
- புனித ஸ்தலங்களுக்கு ஆன்மீக பயணங்கள் செல்வீர்கள்
- ஸ்ரீ ஆஞ்சநேயர் மற்றும் ஸ்ரீ ஆதிசேஷன், பூஜை மற்றும் ஆலயங்கள் சென்று வழிபடுதல்.
- குரு, சனி, ராகு, கேதுவுக்கு பூஜை, ஹோமம் செய்து வழிபடுதல்.
- காக்கைக்கு அன்னம் இடுதல்



# மீனம்



- பொதுவாக நல்ல காலம் ஆகும்.
- தொழில் விஷயங்களில் மட்டும் சிறு, சிறு பிரச்சினைகளை சந்தீப்பீர்கள்.
- தொழில் மற்றும் பணி தொடர்பான செயல்களில் அதீத தன்னம்பிக்கையை தவிர்க்கவும்.
- குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும்.
- கோபமான வார்த்தை பேசுவதை தவிர்க்கவும்.
- பலவகையில் தன வரவு உண்டு.
- வெளியூர் பயணங்களால் நன்மை உண்டு.
- வீடு, சொத்து, வாகன விஷயங்களில் கவனம் தேவை.
- வாகனத்தை பழுது பார்த்து சரி செய்வீர்கள்.
- குழந்தைகள் உடல் நிலையில் பாதிப்பு உண்டாகும்.
- மருத்துவ செலவுகள் ஏற்படும்.
- எதிரிகள் விலகிச் செல்வார்கள்.
- தம்பதிகள் ஒருவருக்கொருவர் விட்டு கொடுத்து செல்வது நல்லது.
- முக்கிய பிரமுகர்களின் நட்பு கிடைக்கும். முதலீடுகளால் லாபம் உண்டு.

## பரிகாரம்:

- திருசெந்தூர் முருகபெருமான் மற்றும் சித்தர்கள் வழிபாடு, பூஜை மற்றும் ஆலயங்கள் சென்று வழிபடுதல்.
- மீன்களுக்கு உணவு இடுதல், பாம்பு புற்றுக்கு பால் வார்த்தல்.

~ ஜோதிடர் ஜெயம் ஜனார்தனன்